TAMIL NADU POLLUTION CONTROL BOARD

O/o. District Environmental Engineer
Tamilnadu Pollution Control Board
Maraimalai Nagar

Minutes of Public Hearing Conducted for Proposed Rough Stone and Gravel quarry of M/s. Global Mines located at S.F.No. 181/2, Periyavenmani Village in an extent of 2.03.0 Ha, S.F.No. 174/1, 2,3,4 & 175/1 Periyavenmani Village in an extent of 2.07.50 Ha and S.F.No. 172/3, 4,5,6, 179/1,2,3,4,5 &173/6, Periyavenmani Village, in an extent of 4.07.50 Ha Maduranthagam Taluk, Chengalpattu on 19.12.2025 at 11.00 AM at KS Marriage Hall, Periyavenmani Village, Maduranthagam Taluk, Chengalpattu District

Details of the Project:

S. No	Name and location of the proposed quarry	Quarry size (hectares)
1.	M/s. Global Mines located at S.F.No. 181/2, Periyavenmani Village, Maduranthagam Taluk, Chengalpattu District.	2.03.0 Ha
2	S.F.No. 174/1, 2,3,4 & 175/1 Periyavenmani Village, Maduranthagam Taluk, Chengalpattu District	2.07.50 Ha
3	S.F.No. 172/3, 4,5,6, 179/1,2,3,4,5 &173/6 Periyavenmani Village, Maduranthagam Taluk, Chengalpattu District	4.07.50 Ha

Venue: M/s. KS Marriage Hall,
Periyavenmani Village,
Maduranthagam Taluk,
Chengalpattu District

Date and Time: 19/12/2025, 11.00 AM

Present:

1.	Tmt.S.Ramya	:	Revenue Divisional Officer, Madurantakam.
2.	Thiru.G. Kesavamoorthy	:	District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar, Chengalpattu District.
3.	Thiru.Balasubramanian		Assistant Director Department of geology & Mining

4.	Thiru.G.Manivasagan	:	Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar, Chengalpattu District.
5.	Thiru.Senthilnathan	:	Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar, Chengalpattu District.
6.	Public	:	112 persons (Copy of the Attendance is enclosed)

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Maraimalai Nagar welcomed the Revenue Divisional Officer, Maduranthagam, other Government Officials, Publics, Social & Environmental activists for the Public Hearing and informed that the proposed stone and gravel quarry of M/s. Global Mines located at S.F.No. 181/2, Periyavenmani Village in an extent of 2.03.0 Ha, S.F.No. 174/1, 2,3,4 & 175/1 Periyavenmani Village in an extent of 2.07.50 Ha and S.F.No. 172/3,4,5,6, 179/1,2,3,4,5 &173/6, Periyavenmani Village, in an extent of 4.07.50 Ha Maduranthagam Taluk, Chengalpattu District have approached State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed rough stone and gravel quarries in the cluster. In this regard, SEIAA-TN has issued Terms of Reference (TOR) File No.11794 dated 07.04.2025, 11783 dated:07.04.2025 & 11723 dated:08.04.2025 subject to one of the conditions that Public Hearing shall be conducted and address the concerns raised during the public hearing to SEIAA-TN. Based on that, the public hearing was arranged on today 19.12.2025 after getting approval from the District Collector, Chengalpattu District and public notice has been published as mandated in the newspaper namely "Deccan Chronicle" (English)& "Daily Thanthi (Tamil)" on 12.11.2025.

Then the DEE, TNPCB informed that on behalf of project proponent, the Project Consultant will make power point presentation about the said proposed project and the public present can express their views, concerns and questions if any by indicating their name and village from where he /she comes from. It was also informed that the proceedings of the entire meeting will be recorded.

After that, the project consultant Thiru.M. Shaik Nawas, Jio Exploration and Mining Solutions, Salem explained about the proposed project through a power point presentation before the public present during public hearing.

The views, concerns, questions and comments of the public and the clarification from the project proponent are detailed below.

S. No	Name and Village	Comments and requests
1	**Thiru.Kamalakkannan, Periyavenmani**	My name is M.Kamalakkannan, and I am a resident of Periyavenmani village. At present, a total of four crusher/Quarry units are operating in Periyavenmani village. If the total land area of our village is estimated to be around 500 acres, one-third of it approximately 93 acres has already been excavated with quarry pits. A few days ago, public hearing ws conducted and behalf of Udayam Company had establishing a new quarry with a minimum extent of 4 hectares (approximately 9 acres). However, that company has already excavated pits for three quarries, which together cover an area of about 30 acres. Similarly, PCS Company has carried out quarrying operations over a total extent of about 20 acres, In addition, the Global mining Company is operating over approximately 40 acres. Earlier, AK Company operated on 10 acres, and prior to that on 5 acres, with quarry pits already excavated in several locations. In this situation, Global mining solutions have now applied for permission to establish a quarry over an extent of 23.33 acres in Kanchipuram District. No one in this district has so far been granted quarry permission for an extent as large as 23 acres, our primary concern is what will happen to our livelihood if excavation is permitted over such a vast area. Moreover, near the proposed 23-acre quarry site, there is a large lake located in Survey No. 164, and all the survey numbers for which permission has now been sought is located to the southern side of this lake. If quarry pits are excavated here, all the water that should flow into the lake will be collected in these pits. Due to the existing quarry pits there is currently no water in any of the wells in our village. In case of rainfall, the rainwater will accumulate in these pits, completely preventing water from reaching the lakes and recharging the groundwater. As a result, the farming community of Periyavenmani village will be severely affected. Therefore, I respectfully submit our

		request that permission should not be granted for this quarry project. Furthermore, all the survey numbers for which permission has presently been sought are Panchami lands (assignment properties) granted by the government with specific conditions, and the government has clearly stipulated from the outset that such lands should not, under any circumstances, be used for mining activities. In continuation of this, as per Government Order Social Welfare Department No. 12 issued on 18.01.2020 and implemented through the Social Welfare Department in 2022, it has been explicitly stated that lands allotted to Adi Dravidars should not be involved in any mining activities, including stone quarries. When this government order is in force, it is unclear on how permission can be granted for mining activities on lands allotted for the welfare of Adi Dravidars. When the sale or change of use of Adi Dravidar lands is permitted only to another Adi Dravidar, how can the Department of Geology and Mining grant permission for quarrying on such lands? We also question how various departments are coordinating to issue such approvals. If permissions are granted in this manner, there is no doubt that this village will be completely destroyed. Furthermore, as per Government Order No. 555 issued during 2006–2007, landless poor persons were allotted land at the rate of two acres each, and five beneficiaries were selected under this scheme. The government clearly stipulated that these lands should not be sold or diverted for any other use for a period of 30 years. However, in complete violation of this government order, the company has purchased two acres of land from these beneficiaries and has also carried out registration of the sale deeds. These lands are now being used for crusher and quarry operations, which is entirely contrary to the provisions of the government order, and I respectfully bring this to your kind attention. Further, serious questions arise regarding the profile submitted by the company: which route is being used for this project, and is there any separately allotted access road? They claim to have purchased around 200 acres of land, but what is the legally

		approved access route to reach this 200-acre area? Quarry operations necessarily require a lawful approach road, yet the route they are using is not their patta land. They have illegally used government-owned hill land in Survey No. 203, social welfare forest land, and government porambokku in Survey No. 187, uprooting trees from existing social welfare forests and creating access roads by indiscriminate excavation, causing extensive destruction of forest cover in the entire area. If permission is granted again, they will convert an additional 10 acres of land into access roads for the quarry, cutting down all the trees along the route, which will result in the complete loss of grazing lands for cattle. Consequently, people will be forced to sell their properties and vacate the village, with no alternative means of survival. So far, no panchayat administration has allotted them any lawful access road; instead, they have laid a road approximately 50 feet wide and about one and a half kilometers long on their own, through which nearly five acres of land have been completely affected, while another three-acre land on the opposite side has been left without any access at all. Without a proper and legal approach road, it is questionable how land could have been purchased for quarry and crusher activities. At present, there is no place left to graze cattle, and when people take their goats and cattle out to graze, blasting operations are carried out around 3 p.m., forcing them to return in fear. Farmers and people who depend entirely on livestock for their livelihood are severely affected and have no alternative source of income. Despite all these impacts, the question remains as to why Periyavenmani village alone is repeatedly chosen for granting quarry permissions; within Madurantakam Taluk, it is the only village that already has four quarries. A contractor first purchases four acres, excavates pits in that land, and the owners of the adjacent four acres, out of fear, sell their lands; once again, a public hearing is conducted and permission is granted, followed by the purchase of another four acres, and in this manner the entire village is gradually being emptied. It is evident that all these lands are entirely Assignment lands. Moreover, all the

		properties currently being used by them have been acquired through forged and fraudulent documents. The sellers, buyers, and those who registered the sale deeds are unrelated to one another, and in many cases a single individual has independently executed documents, based on which permissions have been sought; more than one-third of the lands involved are supported only by false documents. There is, in fact, a genuine landowner, but without obtaining patta from that person or executing any lawful sale deed, the lands have been transferred to others. In particular, in two survey numbers, the original assignment patta is held by one person, while the sale patta is held by another, and this matter is currently pending before the court. If the genuine owner succeeds in the case, the owner will lose everything; since there is a serious risk that pits will be excavated and the land will be irreversibly damaged. Further, many registrations have been carried out without obtaining death certificates or legal heir certificates for the rightful successors, which constitutes a grave violation of law. Therefore, I clearly state that no further quarry or crusher permissions should be granted in this village, either now or in the future. I respectfully request and ask that it be clearly announced today itself whether permission will be granted or not. If permission is granted in violation of these concerns, I state responsibly that I will compel the officials who issued such permission to face proceedings before the court. On my behalf & the people of Periyavenmani Village, I submit this petition to respected madam. Thank you
2	**Thiru Jayaraman**	My name is P. Jayaraman, former Panchayat President, and I have come to participate in this public hearing meeting regarding the permission sought for establishing the Global Mines quarry in Periyavenmani Village, Chengalpattu District, Madurantakam Taluk. I do not usually attend all meetings related to quarries, but I have chosen to participate in this meeting because it is necessary to speak about this particular

		quarry. The reason for my presence is that this quarry is properly established on land owned by Periyavenmani Village, located outside the residential areas, between Periyavenmani and Chinnavenmani villages. It has been acquired legally, and it operates without causing any adverse effects to the general public, the Revenue Department, On the contrary, the quarry is fulfilling the needs of the villagers. The management of this quarry has been responsibly addressing all requests and requirements presented by the village residents. Furthermore, this quarry is located between Periyavenmani Village and neighboring villages. Initially, it was stated that there is a distance of approximately 1,000 meters, which was later revised to 500 meters. However, adequate spacing has been maintained for each village, ensuring that residential areas, temples, drinking water ponds, and lakes remain unaffected. The Quarry of Aarupadayappa has obtained permissions necessary for constructing the access road based on the verification by concerned departments and hence, I register my personal opinion, on behalf of the public and myself, that permission can be granted for this quarry. Additionally, the people expect that Global Solution to operate responsibly in the area from Periyavenmani Panchayat to Ariyanur. Children in this area travel to school and tuition classes both day and night. For their safety and the welfare of the general public, street lights should be installed along the route from Periyavenmani Panchayat to Ariyalur. Moreover, educational facilities and other basic amenities for the local population should be provided through the company. On behalf of the people, I submit this statement.
3	**Tmt. Mala, Periyavenmani**	Greetings to everyone. My name is Mala, and I am from Periyavenmani Village. I serve as the Ward representative and as the district secretary of the Bharatiya Janata Party. I fully support granting permission to Global Mines. We have arranged the access

		route for the company, and we also approve the establishment of the Global Mines quarry. Thank you
4	**Thiru. Suresh, Chinnavenmani**	Our Chinnavenmani village will be completely affected by this quarry. Our Malaimedu village is located at a maximum distance of 500 meters from the site where the quarry is to be established. Periyavenmani village will not be affected in any way by this quarry. Furthermore, a crucial question: Which route has been permitted for this quarry? If a road is constructed through the Chinnavenmani forest area, and if that area is encroached upon, we will definitely go to court. The village council president or any other person does not have the authority, at any time, to pass a resolution and utilize forest department lands. Any activity related to forest department land is illegal. If any attempt is made to encroach upon it, we will file a court case. As they claim, not a single thing shown in this video has been implemented in practice. Lorries have already caused fatalities by traveling through the pits dug in the nearby quarries. On the other hand, the explosions they are carrying out are not ordinary explosions; they are very powerful. Even though our village is about three kilometers away from that site, the houses shake due to the vibrations from these explosions many mistakes are continuously happening. Therefore, if there is no impact on Periyavenmani village, the quarry can be established only in that village area; otherwise, it should be completely abandoned. They should be granted permission only through the legal route they are requesting. We will not allow any road through the forest area. Even if they pass a resolution, we will not accept it; we will go to court. Our clear stance is that permission for this quarry has been sought without a proper route and without legal authorization
5	**Thiru. Govindhaswamy.**	My name is Govindasamy. We are not directly affected by the Global Mines company. However, children face great difficulties due to the trucks speeding on the roads. Specifically, the trucks should drive

		slowly and responsibly when turning onto the Venmani road. I also humbly request that streetlights be installed in those areas
7	**Tmt. Uma Maheshwari**	We have no problems with Global Mining Solution quarry
8	**Thiru. Loganathan**	I am from Ariyanur Panchayat; my name is Loganathan. Quarries are operating in the Venmani and Nagamalai areas, and children from the Ariyalur area have to go to the Cheyyur school. They have to travel through Thiruvarur Pavanjeru, and the road is very narrow and congested. In particular, the heavy traffic of large vehicles is causing significant problems for our village. Therefore, arrangements should be made to ensure that vehicles travel slowly and safely; proper road facilities are essential for this. Our main demand is that road facilities should be provided through this quarry. Furthermore, since the drinking water in our area is saline, I request the quarry owner to provide RO purified drinking water facilities. The officials present here should also cooperate in this matter. Road facilities and street lighting are especially crucial because the children are facing great difficulties; at night, when lorries come speeding with their lights on, people are startled and even fall down. Therefore, I request that road facilities be provided as a priority. Thank you
9	**Tmt.Nirmala, Periyavenmani** .	I have not been affected in any way; I have no complaints about the quarry being established. Currently, I am retired from my job at the preschool and am staying at home. If I am offered a job opportunity, that would be sufficient. I humbly request this.
10	**Thiru. Manoharan**	They have set up the crusher in a location where there is no environmental impact. They have also constructed the necessary road and made all other arrangements completely. We have not been affected in any way by Global Mines Company.

The public hearing meeting was concluded with thanks to the Revenue Divisional Officer, Madurantakam, Officials, Public and NGO's attended and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting, written petitions along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai. The proponent has reported that the EIA will be revised on the query raised in this Public Hearing and will be submitted to the SEIAA-TN.

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the public hearing meeting are enclosed herewith.

With this, the public consultation meeting concluded.

The following persons have furnished their views in written statements / letter (Copy enclosed)

S.No.	Name	Address
1.	Secretary cum Director Thiru.B.Subbaramaiah	R.U.N.S Rural Upliftment Net Work Society
2.	Thiru.B.Durga Prasad Lepakshi Environmental Rural Development Society	No.131/2013 South India
3.	Haritha Educational Rural Welfare Society Environment Development Organization	No.11-131, Indira Nagar, Uravakonda – 515812, Ananthapuramu District (A.P)
4.	Thiru.M.Kamalakannan S/o.Mariappan and Village public	No.184, Periavenmani Village, Madhuranthagam Taluk, Chengalpattu District - 603311

Other Enclosures:

1) Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 12.11.2025
2) Copy of Attendance sheet of the public hearing meeting along with photographs and Pendrive recorded with the entire proceedings of public hearing.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Maraimalai Nagar

Revenue Divisional Officer,
Madhurandhagam,
Chengalpattu District

6/7.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
மறைமலைநகர்

பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பெரியவெண்மணி கிராமம், புல எண்.181/2 பரப்பளவு 2.03.00 ஹெக்டேர், புல எண். 174/1,2,3,4 மற்றும் 175/1 பரப்பளவு 2.07.50 மற்றும் புல எண். 172/3,4,5,6, 179/1,2,3,4,5 மற்றும் 173/6 பரப்பளவு 4.07.50. தி/ள்.குளோபல் மைன்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கான சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் 19/12/2025 அன்று காலை 11.00 மணி அளவில் தி/ள்.கே.எஸ்.மஹால், பெரியவெண்மணி கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை விவரங்கள்.

திட்ட விவரங்கள்:

வ.எண்.	முன்மொழியப்பட்ட குவாரியின் பெயர் மற்றும் இடம்	குவாரியின் அளவு (ஹெக்டர்)
1.	தி/ள். குளோபல் மைன்ஸ், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி புல எண். 181/2 பெரியவெண்மணி கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.	2.03.00 ஹெக்டேர்
2	புல எண். 174/1,2,3,4 மற்றும் 175/1 பெரியவெண்மணி கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்.	2.07.50 ஹெக்டேர்
3	புல எண். 172/3,4,5,6, 179/1,2,3,4,5 மற்றும் 173/6 பெரியவெண்மணி கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம்	4.07.50 ஹெக்டேர்

இடம்; தி/ள்.கே.எஸ்.மஹால்,
பெரியவெண்மணி கிராமம்,
மதுராந்தகம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
நாள் மற்றும் நேரம்: 19.12.2025, காலை – 11.00 மணி

பங்கேற்றோர்:

1.	திருமதி.S.ரம்யா	:	வருவாய் கோட்டாட்சியர், மதுராந்தகம்
2.	திரு. G.கேசவ மூர்த்தி	:	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர்
3.	திரு.M. பாலசுப்பிரமணியன்	:	உதவி இயக்கநர் புவியியல் மற்றும் சுரங்கம் துறை
4.	திரு.மணிவாசகன்	:	உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர்
5.	திரு.செந்தில்நாதன்	:	உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர்
6.	பொது மக்கள்	:	112 நபர்கள் (வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மறைமலைநகர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்த வருகை தந்துள்ள வருவாய் கோட்டாட்சியர், மதுராந்தகம் அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பெரியவெண்மணி கிராமம், தி/ள். குளோபல் மைன்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண். 181/2 பரப்பளவு 2.03.00 ஹெக்டேர், புல எண். 174/1,2,3,4 மற்றும் 175/1 பரப்பளவு 2.07.50 மற்றும் புல எண். 172/3,4,5,6, 179/1,2,3,4,5 மற்றும் 173/6 பரப்பளவு 4.07.50 கல் மற்றும் கிராவல் எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தில் விண்ணப்பித்து TOR (Terms of Reference) என்கின்ற வரையறைகளை பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுவின் கோப்பு எண்.11794 நாள்.07.04.2025, 11783 நாள்.07.04.2025 மற்றும் 11723 நாள்.08.04.2025 தேதியிட்ட குறிப்பு விதிமுறை கடிதத்தின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 12.11.2025 அன்று "**தினத்தந்தி**" என்கின்ற தமிழ் நாளிதழிலும் மற்றும் "**டெக்கான் குரோனிகல்**" என்ற ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 19.12.2025 இல் இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்கள் மற்றும் அதனை சார்ந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்து இத்திட்ட ஆலோசகர் திரு. ம.ஷேக் நவாஸ், ஜியோ எக்ஸ்புளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள் விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும், ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

<u>பொதுமக்களின் கருத்து மற்றும் கோரிக்கைகள்</u>

வ.எண்	பெயர் மற்றும் முகவரி	கருத்து மற்றும் கோரிக்கைகள்
1.	**திரு.ம.கமலக்கண்ணன், பெரியவெண்மணி**	என் பெயர் ம.கமலக்கண்ணன் நான் பெரியவெண்மணி கிராமத்தைச் சேர்ந்தவன். இந்த பெரியவெண்மணி கிராமத்தில் தற்போது மொத்தம் நான்கு கிரஷர்/குவாரி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. எங்கள் கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு சுமார் 500 ஏக்கர் எனக் கணக்கிட்டால், அதில் குறைந்தபட்சமாக மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு, அதாவது சுமார் 93 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்கனவே பள்ளங்கள் தோண்டப்பட்டுள்ளன. சில நாட்களுக்கு முன்பு, உதயம் நிறுவனம் சார்பில் மண்டபத்தில், குறைந்தபட்சமாக 4 ஹெக்டர் (சுமார் 9 ஏக்கர்) பரப்பளவில் புதிய குவாரி அமைப்பதற்கான

		கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் அந்த நிறுவனம் ஏற்கனவே மூன்று குவாரிகளில் பள்ளம் தோண்டி உள்ளது. அவை சேர்த்து சுமார் 30 ஏக்கர் பரப்பளவாகும். அதேபோல், பி.சி.எஸ் (PCS) நிறுவனம் சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் குவாரி செயல்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதற்கு மேலாக, குளோபல் நிறுவனம் சுமார் 40 ஏக்கரில் செயல்பட்டு வருகிறது. இதற்கு முன்பு எ.கே நிறுவனம் 10 ஏக்கர், அதற்கு முன்பு 5 ஏக்கர் என ஏற்கனவே பல பகுதிகளில் பள்ளங்கள் தோண்டப்பட்டுள்ளன. இந்நிலையில், தற்போது அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில், 23.33 ஏக்கர் நிலப்பரப்பில் குவாரி அமைக்க அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளனர். இந்த மாவட்டத்தில் இதுவரை யாருக்கும் 23 ஏக்கர் அளவிலான குவாரி அனுமதி வழங்கப்படாத நிலையில், இவ்வளவு பெரிய பரப்பளவில் பள்ளம் தோண்ட அனுமதி வழங்கப்பட்டால், எங்களின் வாழ்வாதாரம் என்ன ஆகும் என்பதே எங்களின் முக்கியமான கேள்வியாக உள்ளது. மேலும், இந்த 23 ஏக்கர் குவாரி அமைக்கப்பட உள்ள இடத்தின் அருகில், சர்வே எண் 164–இல் அமைந்துள்ள ஒரு பெரிய ஏரி உள்ளது. அந்த ஏரியின் தெற்கு பக்கத்தில் தான் தற்போது அனுமதி கோரப்பட்டுள்ள அனைத்து சர்வே எண்களும் அமைந்துள்ளன. அந்த ஏரிக்கு வரக்கூடிய நீரெல்லாம், இங்கு பள்ளம் தோண்டப்பட்டால், அந்த பள்ளங்களிலேயே நிரம்பும் நிலை ஏற்படும். ஏற்கனவே உள்ள குவாரி பள்ளங்களின் காரணமாக, எங்கள் கிராமத்தில் உள்ள எந்தக் கிணற்றிலும் தற்போது தண்ணீர் இல்லை. இனி மழைநீர் கிடைத்தாலும், அந்த நீர் அனைத்தும் இந்த பள்ளங்களில் தேங்கிவிடும்; இதனால் ஏரிகளுக்கும், நிலத்தடி நீருக்கும் நீர் செல்வது முற்றிலும் தடைப்படும். இதன் விளைவாக, பெரியவெண்மணி கிராமத்தில் விவசாயம் செய்து வரும் மக்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். எனவே, இந்த குவாரி திட்டத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது என எங்களது கோரிக்கையை மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தற்போது இவர்கள் அனுமதி கோரி உள்ள அனைத்து சர்வே எண்களும் அரசு நிபந்தனைகளுடன் வழங்கப்பட்ட பஞ்சமி நிலம்

		(Assignment Property) ஆகும். இவ்வகை நிலங்களை எந்த சூழலிலும் சுரங்கத் தொழிலுக்கு பயன்படுத்தக் கூடாது என அரசே ஆரம்பத்திலேயே நிபந்தனை விதித்துள்ளது. இதனைத் தொடர்ந்து, 18.01.2020 அன்று வெளியிடப்பட்டு, 2022 ஆம் ஆண்டு சமூக நலத்துறை மூலம் வழங்கப்பட்ட அரசாணை எண் 12–இன் படி, கல்குவாரி உள்ளிட்ட எந்தவொரு சுரங்கத் தொழிலிலும் ஆதிதிராவிடர் நிலங்களை ஈடுபடுத்தக் கூடாது என்று தெளிவாக அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த அரசாணை நடைமுறையில் இருக்கும் போது, ஆதிதிராவிடர் நலனுக்காக வழங்கப்பட்ட நிலங்களுக்கு, இந்த அரசு எவ்வாறு சுரங்கத் தொழிலுக்கு அனுமதி வழங்குகிறது என்பது எங்களுக்கு புரியாத ஒன்றாக உள்ளது. ஆதிதிராவிடர் நிலங்களை விற்கவோ அல்லது மாற்று பயன்பாட்டிற்கு அனுமதி வழங்கவோ, மற்றொரு ஆதிதிராவிடருக்கு மட்டுமே உரிமை உள்ள நிலையில், இவ்வகை நிலங்களில் சுரங்கத் தொழிலுக்கு புவியியல் மற்றும் சுரங்கத் துறை எவ்வாறு அனுமதி வழங்குகிறது? இதற்காக பல்வேறு துறைகள் எவ்வாறு ஒருங்கிணைந்து உத்தரவுகளை வழங்குகின்றன என்பதும் எங்களின் கேள்வியாக உள்ளது. இவ்வாறு அனுமதிகள் வழங்கப்பட்டால், இந்த கிராமம் முழுமையாக நாசமாகிவிடும். மேலும், 2006–2007 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசாணை எண் 555–இன் படி, நிலமற்ற ஏழைகளுக்கு தலா 2 ஏக்கர் வீதம் நிலம் வழங்கப்பட்டு, அதில் 5 பேர் பயனாளிகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அந்த நிலங்களை 30 ஆண்டுகள் வரை விற்கவும், மாற்றுப் பயன்பாட்டிற்கும் உட்படுத்தக் கூடாது என்று அரசு தெளிவாக நிபந்தனை விதித்துள்ளது. ஆனால், அந்த நிறுவனமானது அரசாணைக்கு முற்றிலும் எதிராக, அந்த பயனாளர்களிடமிருந்து இரண்டு ஏக்கர் நிலங்களை வாங்கி, அதற்கான பத்திரப் பதிவையும் மேற்கொண்டுள்ளது. அந்த நிலங்கள் தற்போது கிரஷர் மற்றும் குவாரி பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவும் அரசாணைக்கு முற்றிலும் முரணான செயலாகும் என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

		அதன்பின், அவர்கள் சமர்ப்பித்துள்ள ப்ரொபைல் (Profile) குறித்து கேள்வி எழுகிறது. இந்த ப்ரொபைலுக்காக எந்த வழித்தடம் (Route) பயன்படுத்தப்படுகிறது? அவர்களுக்கு தனியாக ஒதுக்கப்பட்ட பாதை ஏதேனும் உள்ளதா? அவர்கள் சுமார் 200 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளதாக கூறுகின்றனர். அந்த 200 ஏக்கர் நிலத்திற்குச் செல்ல எந்த சட்டபூர்வமான வழிப்பாதை உள்ளது? குவாரி செயல்பாடுகளுக்காக சுரங்கம் செல்வதற்காக ஒரு முறையான பாதை அவசியம். ஆனால், அவர்கள் பயன்படுத்தும் பாதை அவர்களுடைய பட்டா நிலம் அல்ல. சர்வே எண் 203 மலைப்பகுதி அரசுச் சொத்து, சமூக நலக் காடுகள் மற்றும் சர்வே எண் 187 புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றை சட்டவிரோதமாக பயன்படுத்தி, ஏற்கனவே இருந்த சமூக நலக் காடுகளில் உள்ள மரங்களை முற்றிலும் அகற்றி, எலி வலை போல் தோண்டி தோண்டி தங்களுக்கேற்ற வழிப்பாதையை உருவாக்கியுள்ளனர். இதன் காரணமாக, அந்தப் பகுதி முழுவதும் மரங்கள் அழிந்து, காடு முழுமையாக சேதமடைந்துள்ளது. இப்போது மீண்டும் அனுமதி வழங்கப்பட்டால், இந்த குவாரிக்கு செல்லுவதற்காக மேலும் 10 ஏக்கர் அளவிலான நிலப்பரப்பை பாதையாக மாற்றிக் கொள்வார்கள். அந்த வழித்தடத்தில் உள்ள அனைத்து மரங்களையும் வெட்டி அழிப்பார்கள். இதன் விளைவாக, ஆடு, மாடு மேய்க்கும் நிலங்களே இல்லாமல் போகும். மக்கள் தங்கள் சொத்துகளை விற்றுவிட்டு, ஊரை காலி செய்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படும்; இதற்கு வேறு எந்த மாற்றுவழியும் இருக்காது. இதுவரை, பஞ்சாயத்து நிர்வாகம் எவரும் அவர்களுக்கு சட்டபூர்வமான பாதையை ஒதுக்கிக் கொடுத்ததில்லை. அவர்கள் தன்னிச்சையாக, சுமார் 50 அடி அகலத்தில், ஒன்றரை கிலோமீட்டர் நீளத்திற்கு சாலை அமைத்துள்ளனர். இப்படிப் பட்ட சாலை அமைப்பின் மூலம், சுமார் 5 ஏக்கர் நிலம் முழுமையாக பாதிக்கப்படுகிறது. மேலும், இன்னொரு பக்கத்தில் உள்ள 3 ஏக்கர் நிலத்திற்கு செல்ல எந்த மாற்றுப்பாதையும் இல்லை. முறையான பாதை இல்லாமல், குவாரி மற்றும் கிரஷர் செயல்பாடுகளுக்காக நிலங்களை எவ்வாறு வாங்க முடியும்? இன்றைய நிலையில், ஆடு, மாடுகளை மேய்க்க இடமே

		இல்லை. ஆடு, மாடுகளை ஓட்டிச் சென்றால், பிற்பகல் 3 மணிக்கு வெடிப்பு பணிகள் நடைபெறுகின்றன. இதனால் பயந்து, மக்கள் தங்கள் ஆடு, மாடுகளை விரட்டி கொண்டு திரும்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. விவசாயிகளும், கால்நடை வளர்ப்பை மட்டுமே நம்பி வாழும் மக்களும் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு வேறு எந்த வாழ்வாதாரமும் இல்லை. இத்தனை பாதிப்புகள் இருந்தும், தொடர்ந்து குவாரிகளுக்கு அனுமதிகள் வழங்க பெரியவெண்மணி கிராமத்தை மட்டும் ஏன் தேர்ந்தெடுக்கிறீர்கள்? மதுராந்தகம் தாலுகாவில் நான்கு குவாரிகள் உள்ள ஒரே கிராமம் பெரியவெண்மணி கிராமம் தான். யாராவது ஒரு முதலாளி வருகிறார்; முதலில் நான்கு ஏக்கர் நிலம் வாங்குகிறார்; அந்த நான்கு ஏக்கரில் பள்ளம் தோண்டுகிறார். அருகிலுள்ள மற்ற நான்கு ஏக்கர் நில உரிமையாளர்கள் பயந்து நிலத்தை விற்றுவிடுகின்றனர். மீண்டும் நீங்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி அனுமதி வழங்குகிறீர்கள். பின்னர் மீண்டும் இன்னொரு நான்கு ஏக்கர் வாங்கப்படுகிறது. இப்படியே இந்த கிராமம் முழுவதையும் காலி செய்து விடுகின்றனர். இவை அனைத்தும் முற்றிலும் பஞ்சமி நிலங்களே என்பது தெளிவாகிறது. அதுமட்டுமின்றி, இவர்கள் தற்போது பயன்படுத்தி வரும் சொத்துகள் அனைத்தும் பொய்யான ஆவணங்கள் மூலம் வாங்கப்பட்டவையாக உள்ளன. விற்பனை செய்தவர்களும், வாங்கியவர்களும், பத்திரம் பதிவு செய்தவர்களும் ஒருவருக்கொருவர் தொடர்பில்லாதவர்கள். ஒரே நபர் தனியாக பத்திரம் செய்து, அதனை அடிப்படையாக கொண்டு அனுமதி கோரப்பட்டுள்ள அனைத்து பகுதிகளும், மூன்றில் ஒரு பங்குக்கும் மேற்பட்ட அளவில் பொய் ஆவணங்களாகவே உள்ளன. உண்மையான சொத்து உரிமையாளர் ஒருவர் இருக்கிறார். ஆனால், அவரிடமிருந்து பட்டா வாங்காமலும், சட்டபூர்வமான பத்திரம் செய்யாமலும், அந்த நிலங்கள் வேறு நபர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. குறிப்பாக, இரண்டு எண்களில் பொய்யான ஆவணங்களை ஒரிஜினல் அசைன்மென்ட் பட்டாவை ஒரே நபர் வைத்திருக்க, விற்பனைப் பட்டாவை மற்றொரு நபர் வைத்திருக்கிறார். இந்த விவகாரம் தற்போது

		நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. அந்த வழக்கில் உண்மையான உரிமையாளர் வெற்றி பெறும் சூழலில், நிலத்தின் உரிமையாளர் அனைத்தையும் இழக்கும் நிலை ஏற்படும். அதற்குள் பள்ளங்கள் தோண்டப்பட்டு, நிலம் முழுமையாக சேதப்படுத்தப்பட்டுவிடும் அபாயம் உள்ளது. மேலும், வாரிசுதாரர்களுக்கான இறப்பு சான்றிதழ் (Death Certificate) மற்றும் சட்ட வாரிசு சான்றிதழ் (Legal Heir Certificate) இல்லாமலேயே பல பத்திரப் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. இது கடுமையான சட்ட மீறலாகும். எனவே, இந்த கிராமத்தில் இனிமேல் முதலும் கடைசியுமாக எந்தவொரு குவாரி அல்லது கிரஷர் அனுமதியும் வழங்கக்கூடாது என்பதைத் பெரியவெண்மணி கிராம மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நீங்கள் அனுமதி வழங்க உள்ளீர்களா அல்லது வழங்கமாட்டீர்களா என்பதை இன்றே தெளிவாக அறிவிக்க வேண்டும். இதனை மீறி அனுமதி வழங்கப்பட்டால், அந்த அனுமதியை வழங்கிய அதிகாரிகளை நீதிமன்றத்தில் கட்டாயமாக சந்திக்க வைப்பேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். என் சார்பில், இந்த மனுவை அம்மா அவர்களிடம் ஒப்படைக்கிறேன். நன்றி வணக்கம்
2.	**திரு. ஜெயராமன்**	செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், 184 பெரியபெண்மணி கிராமத்தில், குளோபல் மைன்ஸ் கல்குவாரி அமைப்பதற்கான அனுமதி கோரி, தற்போது நடைபெற்று வரும் இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொள்ள வந்துள்ள என் பெயர் பி. ஜெயராமன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர். நான் அனைத்து கல்குவாரி தொடர்பான கூட்டங்களிலும் கலந்து கொள்வது இல்லை. ஆனால், இந்த கல்குவாரி குறித்து பேச வேண்டிய அவசியம் இருப்பதால், இந்த கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளேன். காரணம், இந்த கல்குவாரி கிராம குடியிருப்புப் பகுதிக்கு வெளியே, பெரியவெண்மணி மற்றும் சின்னவெண்மணி கிராமங்களுக்கு இடையில், பெரியவெண்மணி கிராமத்திற்குச் சொந்தமான நிலங்களை முறையாக கிரயம் பெற்று, பொதுமக்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் செயல்பட்டு வரும் கல்குவாரியாக உள்ளது. இந்த கல்குவாரியால், பொதுமக்களுக்கும், வருவாய்த் துறைக்கும், அரசுத் துறைகளுக்கும்

		எந்தவித இடையூறும் இல்லை. மாறாக, இந்த கல்குவாரி கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. கிராம மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் அனைத்தையும், இந்த கல்குவாரியின் நிர்வாகம் முறையாக நிறைவேற்றி வருகிறது. மேலும், இந்த கல்குவாரி பெரியவெண்மணி கிராமத்துக்கும் சின்ன வெண்மணி கிராமத்திற்கும் இடையில், ஆரம்பத்தில் சுமார் 1000 மீட்டர் இடைவெளி இருப்பதாகக் கூறப்பட்டது; பின்னர் அது 500 மீட்டர் என குறிப்பிடப்பட்டது. இருப்பினும், ஒவ்வொரு கிராமத்திற்கும் 1000 மீட்டர் இடைவெளி உள்ளதால், பொதுமக்கள், குடியிருப்புப் பகுதிகள், கோவில்கள், குடிநீர் குளங்கள், ஏரிகள் ஆகியவற்றிற்கு எந்தவித பாதிப்பும் இல்லை. ஆறு படையப்பா கிரஷருக்காக சாலை அமைக்க சம்பந்தப்பட்ட துறைகள் முறையாக ஆய்வு செய்து அனுமதி வழங்கியுள்ளது. இந்த அடிப்படையில், இந்த குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்ற என் தனிப்பட்ட கருத்தை, பொதுமக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் இங்கு பதிவு செய்கிறேன். இதோடு மட்டுமல்லாமல், குளோபல் நிறுவனம், பெரியவெண்மணி ஊராட்சியில் இருந்து அரியனூர் வரையிலான பகுதியில் சமூக பொறுப்புடன் செயல்பட வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். அந்தப் பகுதியில் உள்ள குழந்தைகள் இரவு பகலாக பள்ளிக்கும், டியூஷனுக்கும் சென்று வருகின்றனர். அவர்களின் பாதுகாப்பிற்காகவும், பொதுமக்களின் நலனுக்காகவும், பெரியவெண்மணி ஊராட்சியில் இருந்து அரியலூர் வரையிலான பகுதிகளில் தெருமின் விளக்குகள் அமைத்து தர வேண்டும். மேலும், கல்வி தொடர்பான தேவைகளும், பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகளும் இந்த நிறுவனத்தின் மூலம் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என, மக்கள் சார்பாகக் கேட்டுக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்
3.	**திருமதி. மாலா, பெரியவெண்மணி**	அனைவருக்கும் வணக்கம், என் பெயர் மாலா எங்கள் ஊர் பெரியவெண்மணி. நான் நான்காவது வார்டு உறுப்பினர்; பாரதிய ஜனதா கட்சியின் மாவட்டச் செயலாளராக செயல்பட்டு

		வருகிறேன். குளோபல் மைன்ஸ் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்படுவதற்கு எனக்கு முழு ஆதரவு உள்ளது. அந்த நிறுவனத்திற்கு செல்லும் வழிப்பாதையை நாங்களே ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம், மேலும் குளோபல் மைன்ஸ் குவாரி அமைக்கப்படுவதற்கும் நாங்கள் ஒப்புதல் அளிக்கிறோம்.
4.	**திரு.சுரேஷ்,** **சின்னவெண்மணி கிராமம்**	இவர்கள் வழங்கப் போகும் இந்த குவாரியால் முழுமையாக பாதிக்கப்படுவது சின்னவெண்மணி கிராமம்தான். அந்த குவாரி அமைக்கப்பட உள்ள இடத்திலிருந்து அதிகபட்சமாக 500 மீட்டர் தூரத்தில் எங்களுடைய மலமேடு கிராமம் அமைந்துள்ளது. பெரியவெண்மணி கிராமத்திற்கு இந்த குவாரியால் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. மேலும் ஒரு முக்கியமான கேள்வி–இந்த குவாரிக்கு எந்த வழிப்பாதையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது? சின்னவெண்மணி வனப்பகுதி வழியாக பாதை அமைக்கப்பட்டால், அந்தப் பகுதியில் கை வைக்கப்பட்டால், நாங்கள் நிச்சயமாக நீதிமன்றம் வரை செல்வோம். ஊராட்சி மன்றத் தலைவர் அல்லது வேறு எந்த நபருக்கும், தீர்மானம் போட்டு வனத்துறை நிலங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அதிகாரம் எப்போதும், யாருக்கும் கிடையாது. வனத்துறை நிலம் தொடர்பான எந்த செயல்பாடும் சட்டத்திற்குப் புறம்பானது. அதனைத் தொடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டால், நாங்கள் நீதிமன்ற வழக்கைத் தொடர்வோம். இவர்கள் கூறுவது போல், இந்த வீடியோவில் காண்பிக்கப்பட்ட விஷயங்களில் ஒன்றுகூட நடைமுறையில் பின்பற்றப்படவில்லை. அருகிலிருந்த குவாரிகளில் தோண்டப்பட்ட பள்ளங்களின் வழியாக லாரிகள் சென்று ஏற்கனவே உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. இன்னொரு பக்கம், இவர்கள் மேற்கொள்ளும் வெடிப்புகள் சாதாரண வெடிப்புகள் அல்ல; போர்வெடி போன்ற சக்திவாய்ந்த வெடிப்புகள் நடத்தப்படுகின்றன. எங்களுடைய கிராமம் அந்த இடத்திலிருந்து சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் இருந்தாலும், அந்த வெடிப்புகளின் அதிர்வால் வீடுகள் குலுங்குகின்றன. இத்தனை தவறுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

		எனவே, பெரியவெண்மணி கிராமத்திற்கு பாதிப்பு இல்லையெனில், அந்த கிராமப் பகுதியில் மட்டுமே குவாரி அமைக்கலாம்; இல்லையெனில் அதை முற்றிலும் கைவிட வேண்டும். அவர்கள் எந்த வழிப்பாதையை கோருகிறார்களோ, சட்டபூர்வமான அந்த வழியிலேயே அனுமதி வழங்க வேண்டும். வனப்பகுதி வழியாக எந்த பாதையையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். அவர்கள் தீர்மானம் போட்டாலும், அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்; நீதிமன்றம் செல்வோம். முறையான வழிப்பாதை இல்லாமலும், சட்டபூர்வ அனுமதி இல்லாமலும், பாதையில்லாமல் இந்த குவாரிக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது என்பதே எங்களின் தெளிவான நிலைப்பாடாகும்
5.	திரு. **கோவிந்தசாமி**	வணக்கம் என் பெயர் கோவிந்தசாமி. குளோபல் மைன்ஸ் நிறுவனத்தால் எங்களுக்கு நேரடியாக எந்தவிதமான பாதிப்பும் இல்லை. ஆனால், பள்ளி குழந்தைகள் செல்லும் பாதைகளில், லாரிகள் அதிக வேகத்தில் செல்லுவதால் குழந்தைகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். குறிப்பாக, லாரிகள் வெண்மணி சாலையில் திரும்பும் போது மெதுவாகவும், பொறுப்புடன் ஓட்டிச் செல்ல வேண்டும். மேலும், அந்தப் பகுதிகளில் தெருமின் விளக்குகள் அமைத்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்
6.	**திருமதி.உமா மகேஸ்வரி**	குளோபல் மைனிங் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை
7.	திரு. **லோகநாதன்** **அரியனூர்**	அரியனூர் ஊராட்சியிலிருந்து நான் வந்துள்ளேன்; என் பெயர் லோகநாதன். வெண்மணி மற்றும் நாகமலை பகுதிகளில் குவாரிகள் இயங்கி வருகின்றன், அரியலூர் பகுதியைச் சேர்ந்த குழந்தைகள் செய்யூர் பள்ளிக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. அந்த வழியில் திருவாத்தூர் பவஞ்சூர் வழியாகச் செல்ல வேண்டி இருப்பதால், பாதை மிகவும் குறுகலாகவும், போக்குவரத்து நெரிசலாகவும் உள்ளது. குறிப்பாக, கனரக வாகனங்கள் அதிகமாகச் செல்வதால் எங்கள் ஊருக்கே அதிக பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, போக்குவரத்து வாகனங்கள் மெதுவாகவும் பாதுகாப்பாகவும் செல்லும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்; அதற்காக முறையான சாலை வசதிகள் அவசியம். இந்த குவாரியின் மூலம் சாலை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதே எங்களின் முக்கிய கோரிக்கையாகும். மேலும், எங்கள் பகுதியில் குடிநீர் உப்பு நீராக இருப்பதால், ஆர்ஓ குடிநீர்

		வசதி செய்து தருமாறு இந்த குவாரி உரிமையாளரிடம் கேட்டுக் கொள்கிறேன். இங்கு வந்துள்ள அதிகாரிகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக சாலை வசதி மற்றும் தெருமின் விளக்கு வசதி மிக அவசியம், ஏனெனில் குழந்தைகள் மிகவும் சிரமப்படுகின்றனர்; இரவில் லாரிகள் லைட் போட்டு வேகமாக வரும் போது மக்கள் மிரண்டு கீழே விழும் நிலை கூட ஏற்படுகிறது. எனவே, சாலை வசதி முதன்மையாக செய்து தருமாறு கேட்டுக் கொண்டு, நன்றி தெரிவிக்கிறேன்
8.	திருமதி.நிர்மலா, பெரியவெண்மணி	எனக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை; குவாரி அமைவது பற்றி எனக்கு எந்த குறையும் இல்லை. தற்போது நான் பால்வாடியில் பணியாற்றி ஓய்வு பெற்று வீட்டில் இருக்கிறேன். எனக்கு ஒரு வேலை வாய்ப்பை வழங்கினால் அதுவே போதுமானதாக இருக்கும். இதனைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்
9.	திரு.மனோகரன்	பாதிப்பு இல்லாத இடத்தில்தான் அவர்கள் கிரஷரை அமைத்துள்ளனர். அதற்காக தேவையான சாலையையும் அமைத்து, மற்ற ஏற்பாடுகளையும் முழுமையாக செய்துள்ளனர். குளோபல் மைன்ஸ் நிறுவனத்தால் எங்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராத பட்சத்தில் இப்பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி தந்த மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும், ஏனைய அரசுதுறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் சமுக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல், தாக்க மப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கோரிக்கையாக பெறப்பட்ட புகார் மனுக்கள் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் கீழ்க்கண்ட கடிதங்கள் கூட்டத்தின்போது நேரடியாக மக்களால் கொடுக்கப்பட்டது.
கீழ்க்கண்ட நபர்கள் / அமைப்புகள் தங்கள் கடிதங்களை அளித்தின் (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

வ. எண்.	பெயர்	முகவரி
1.	செயலாளர் மற்றும் இயக்குனர் திரு.பி.சுப்பராமையா	ஆர்.யு.என்.எஸ் கிராமப்புற மேம்பாட்டு வலையமைப்பு சங்கம்
2.	திரு. பி. துர்கா பிரசாத் லேபாக்ஷி சுற்றுச்சூழல் கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம்	எண். 131/2013 தென்னிந்தியா
3.	ஹரிதா கல்வி கிராமப்புற நலச் சங்கம் சுற்றுச்சூழல் மேம்பாட்டு அமைப்பு	எண்.11-131, இந்திரா நகர், உரவகொண்டா – 515812, அனந்தபுரமு

		மாவட்டம் (A.P)
4.	திரு.எம்.கமலக்கண்ணன் த/பெ.மாரியப்பன் மற்றும் கிராம பொதுமக்கள்	எண்.184, பெரியவெண்மணி கிராமம், மதுராந்தகம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம் – 603311

இதர இணைப்புகள்.

1. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் பற்றி 12.11.2025–ஆம் நாளிட்ட தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் வெளிவந்த அறிவிப்பின் நகல்
2. வருகை பதிவேட்டின் நகல், புகைப்படங்கள் மற்றும் நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்ட Pendrive.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

வருவாய் கோட்டாட்சியர்
மதுராந்தகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

1/7